# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## JAFFNA HINDU COLLEGE

| | T | I |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை - 2019
## 1st Term Examination - 2019

| | | | |
|---|---|---|---|
| தமிழ் இலக்கியநயம் Tamil literture | | நேரம் Time | 3 மணித்தியாலம் |
| தரம் Grade | 10 | பகுதி Part | I, II, III |

❖ **பகுதி I இல் 1,2 ஆம் வினாக்களுக்கும் பகுதி II இல் 3ஆம் வினாவுக்கும் பகுதி III இல் எவையேனும் இரண்டு வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.**

### பகுதி I

**1) (i) தொடக்கம் (v) வரையிலுள்ள வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

1) தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோகம் புரிந்தவேளை தன்னில்"..
   அ) இவ்வடிகள் காணப்படும் கவிதை யாது?
   ஆ) இக்கவிதையை இயற்றியவரின் இயற்பெயர் யாது?

2) பத்தி எழுத்து என்பது பத்திறிகைகள் வெளிவரத் தொடங்கிய பின்னர் தமிழுக்கு கிடைத்த புதியதொரு வடிவமாகும்.
   அ) பத்தி எழுத்துக்கள் என்றால் என்ன?
   ஆ) இக் கட்டுரையின் ஆசிரியர் யார்?

3) வாழ்க்கை என்பது போராட்டம். இதில் வலிமையானவையே வாழும்.
   அ) இதில் வலிமையானவையே வாழும் என்று கூறியவர் யார்?
   ஆ) மென்மையானவையே வாழும் என்று கூறியவர் யார்?

4) கிராமிய மக்களால் பாடப்பட்டவையே நாட்டார் பாடல்களாகும்.
   அ) நாட்டார் பாடல் என்பதன் மறுபெயர்கள் 2 தருக.
   ஆ) மருத்துவிச்சி வாழ்த்து என்பதால் கருதப்படுவது யாது?

5) கணவன் மனைவி ஆகியோரின் இல்லறப் பண்பாட்டைத் தமிழ் இலக்கியங்கள் செம்மையாகப் புலப்படுத்தி வந்துள்ளன.
   அ) முளிதயிர் பிசைந்து காந்தன் மெல்விரல் எனும் பாடலைப் பாடியவர் யார்?
   ஆ) காந்தன் மெல்விரல் என்பது எவ்வகை அணி?

(4 x 5 = 20 புள்ளிகள்)

**2) கீழ்க்காணும் பாடற்பகுதியினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

முளிதயிர் பிசைந்த காந்தன் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந் தட்ட தீம்புளிப் பாகற்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.



kalvi.lk

1) மேற்படி பாடல் யாருடைய கூற்று?
2) கலிங்கம் என்பதன் பொருள் யாது?
3) குவளை உண்கண் குய்ப்புகை கழும் இதில் வரும் அணி யாது? விளக்குக.
4) புளிக் குழம்பினைக் கணவன் எவ்வாறு புகழ்ந்தான்?
5) இப்பாடலில் தலைவனிடத்தில் தலைவி கொண்ட அன்பு எவ்வாறு வெளிப்படுகின்றது?

(5 x 5 = 25 புள்ளிகள்)

## பகுதி – II

3) **கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சாலையில் நடக்கின்றேன். இருபுறமும் மரங்கள் மலர் சொரிந்து என் பயணத்தை ஆசீர்வதிக்கும் மரங்கள் வெயிலுக்கு குடை பிடிக்கும் மரங்கள். நான் களைப்படையும் போதெல்லாம் தாயப் பாசத்தோடு தங்கள் மடியில் என்னை ஆசுவாசப்படுத்தும் மரங்கள்.

நன்றி என் கண்களில் சுரக்கின்றது.

மனிதனின் வாழ்க்கைப் பாதையைப் பார்க்கிறேன். அங்கும் வரிசையாக மரங்கள்.

அதோ கல்லால மரங்கள் ; வீட்டு நெறிக்குக் கைகாட்டும் மரங்கள்

மனிதனைப் பார்க்கிறேன் அவன் மரத்திலிருந்தே கோடரிக் காம்பு செய்து கொண்டிருக்கிறான். தருகின்ற தருக்களின் தயவில் வாழ்ந்தாலும் மனிதன் நன்றி கெட்டவனாகவே இருக்கிறான்.

மனிதனை 'மரமே' என்றால் கோபித்துக் கொள்கின்றான். நானோ மரத்தை வசவாக்கியளவு கோபிக்கின்றேன். மனிதன் மரமாக முடியுமா? மனிதனுக்கும் மரத்திற்கும் எவ்வளவு வேறுபாடுகள் !

மண் மனிதனுக்குப் புதைகுழி ; மரத்திற்கோ கருவறை மனிதன் தன்னை மண்ணின் மைந்தன் என்று வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்கிறான். உண்மையில் மண்ணின் மைந்தர் மரங்களே ; மனிதர்கள் அல்லர்.

பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை மரங்கள் மனிதன் பிறந்த இடத்தைச் செலவு செய்கின்றான்.

மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும் மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகின்றான்.

1. தன் பயணத்தை ஆசீர்வதிப்பவை எவை எனக் கூறுகின்றார்.
2. "தாய்ப்பாசத்தோடு தங்கள் மடியில் என்னை ஆசுவாசப்படுத்தும் மரங்கள்" இவ்வடியில் வரும் அணியை விளக்குக.
3. வீட்டு நெறிக்குக் கைகாட்டும் மரங்கள் என்பதன் மூலம் நீவிர் உணர்வது யாது?
4. மனிதன் நன்றி கெட்டவனாகவே இருக்கின்றான் என்று ஆசிரியர் கூறுவதற்கான காரணம் யாது?
5. மண்ணின் மைந்தர் மரங்களே என்று ஆசிரியர் கூறுவது ஏன்?

(5 x 5 = 25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – III

❖ **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

4) மென்மையே வாழும் என்ற கருத்தை வலியுறுத்த கவிக்கோ அப்துல் ரஹ்மான் பயன்படுத்தும் உத்திகளை விளக்குக.

5) புத்தகசாலை எனும் கவிதையில்
   1. நூல்கள், நூலகம் என்பவற்றால் ஏற்படும் பயன்கள்.
   2. நூலகம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்ற கவிஞனின் விருப்பம் என்பவற்றை விளக்குக.

6) நாட்டார் பாடலில்
   1. மருத்துவிச்சியின் மனப்பாங்கு பற்றிக் கூறுக.
   2. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என்று மருத்துவிச்சி விரும்புகின்றாள்?

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page